DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C.133/2024 |
| Deposition of Witness for | : | P.W. 12 |
| Name | : | **ஜெயபாலன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் ஆஜர்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 16.03.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சிவகங்கை தாலுகா காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.06.2023ம் தேதியில் நான் சிவகங்கை மாவட்டம், கல்லல் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அதிகாலை 3.00 மணியளவில் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூாரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தாலுகா, பட்டமங்களம் கிராமத்தை சேர்ந்த செல்வம் மகன் கிருஷ்ணவர்மன் என்ற கிட்டு என்பவரை விசாரிக்க அவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண்.88/2023 இதச பிரிவுகள் 294 பி, 324, 506(2), 307 -ன் கீழ் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல்**

**அறிக்கை அ.த.சா.ஆ.10** ஆகும். புகாரையும், முதல் தகவல் அறிக்கையும் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து நகலை மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார் வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் நான் தான் எழுதினேன். புகார் வாக்குமூலம் வாங்கும்போது பாதிக்கப்பட்ட புகார்தாரர் நபர் பேசக்கூடிய கேட்டும் கேள்விகளுக்கு பதில் கூறக்கூடிய நிலையில் இருந்தாரா என்றால் இருந்தார். புகார்தாரர் புகார்வாக்குமூலத்தில் அருவாள் மனையால் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். புகாரில் வழக்கு சம்பவத்தில் செல்வமணி இருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். எனக்கு வழக்கு சம்பம் பற்றி காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்து நான் மருத்துவமனை சென்று தான் காயம்பட்டவரை விசாரித்தேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் காயம்பட்டவர் எவ்வாறு மருத்துவமனைக்கு சென்றார் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் 108 ஆம்புலன்சில் வந்ததாக சொல்லியுள்ளார். காயம்பட்டவர் வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றதாக புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் இரவு 10.00 மணிக்கு சென்றதாக கூறியுள்ளார். சாட்சிகள் 1 , 2 மற்றும் செல்வமணி ஆகியோர்கள் மீது அன்றைய தினமே இந்த வழக்கில் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். இந்த வழக்கில் புகார்தாரர் சொன்னது போல் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் நான் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்யவில்லை.

**மறு விசாரணை**:இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.16 11:15:45 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**